பக்கங்கள் 22+5

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 30 ஞாயிற்றுக்கிழமை 15.09.2024 | அதிர்வு 45



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழர் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் திலீபனின் நினைவேந்தல் வாரம் ஆரம்பம்

## யாழ். நல்லூர் நினைவுத் தூபியில் பிரதான நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்,
பிரபாகரன் டிலக்சன்)

“மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! சுதந்திர தமிழீழம் மலரட்டும்!!” என்ற கோஷத்துடன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து வீரச்சாவடைந்த தியாக தீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் வாரம் இன்று தமிழர் தாயகத்திலும், தமிழர்கள் புலம்பெயர் வாழும் தேசம் எங்கும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமானது.

02 ▶



# தமிழர் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் திலீபனின் நினைவேந்தல் வாரம் ஆரம்பம்















(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான நிகழ்வு யாழ். நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் நடைபெற்றது.

தியாகி தீலிபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நேரமான முற்பகல் 9.45 மணியளவில் அஞ்சலி நிகழ்வு ஆரம்பமானது.

மாவீரர் ஒருவரின் தாயாரால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. அதன் பின்னர் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கு முன்னாள் போராளி ஒருவர் மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் உணர்வுபூர்வமாக மலர் அஞ்சலி செலுத்தினார்.

மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாகத் திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைக் கூடங்களிலும் இராணுவப் பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, தியாக தீபம் திலீபன் 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் அஹிம்சை வழியில் யாழ். நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.





# அநுரவின் ‘திசைகாட்டி’க்கு சகலரும் வாக்களிப்போம்!

## சமூகச் செயற்பாட்டாளர் சுகு சிறிதரன் அறைகூவல்

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்கவின் “திசைகாட்டி“ சின்னத்துக்கு வாக்களிப்போம் என்று சமூகச் செயற்பாட்டாளர் சுகு சிறிதரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“இலங்கையில் வறுமை, வேலையின்மை, எங்கும் ஊழல் எதிலும் ஊழல் தொடர்பான தெளிவான பார்வை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினரிடம் உண்டு.

சாதாரண மக்களின் கல்வி, சுகாதாரம், உணவு, வீடு, நிலம் தொடர்பான கரிசனைகள் அவர்களுக்கு இருக்கின்றன. சமூகங்களுடைய சமத்துவம், இலங்கையின் வாழ்வு ஒரு சில பணம் படைத்தவர்களுக்கு என்றும், பெருவாரியான மக்களின் வாழ்வு பாழ் பட்டு வறுமை மிஞ்சி போனது என்ற நிலையையும் மாற்ற வேண்டுமென்ற தார்மீக ஆவேசமும் அவர்களிடம் இருக்கின்றது.

மதவாதம், இனவாதம், தீண்டாமை இவற்றுக்கு எதிரான மானசிகமான எண்ணம் அவர்களிடம் இருக்கின்றது. தேசிய இனப் பிரச்சினைகளுக்கு, தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படக்கூடிய இலங்கையின் அனைத்து சமூக அறிவு ஜீவிகள் அவர்களுடன் இருக்கின்றார்கள்.

13 ஆவது மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களை முழுமையாக பகிர்வதற்கான அக்கறை உள்ளவர்கள் அவர்களிடம் இருக்கின்றார்கள்.

குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் குடியேற்ற திட்டங்களை அனுமதிக்கப்



போவதில்லை என்று தேசிய மக்கள் சக்தியினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் நிர்வாக இயந்திரத்துக்கு முன்னுரிமை தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முதிர்ச்சியான இராஜதந்திர உறவுகள் பற்றி அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்துரைக்கின்றது.

76 வருடங்களாக மாறி மாறி ஆட்சி செய்தவர்களில் சந்திரிகாவின் ஆட்சி போன்று விதிவிலக்கான காலங்கள் தவிர இந்த நாடு முழுதாக குட்டிச்சுவர் ஆக்கப்பட்டுள்ளது., தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. இந்த 76 வருடங்களில் 40 தொடக்கம் 50 வருடங்கள் பேரழிவுகரமானவையாக இருந்தன. இந்த அழிவுகரமான இந்த நாட்டின் தலைவிதியை மாற்ற வேண்டும்.

பல தவறுகள், சரிகளின் ஊடாக மக்கள் விடுதலை முன்னணியினர் இன்றைய நிலையை வந்தடைந்திருக்கின்றார்கள். இன்று ஜனாதிபதித் தேர்தலில் முக்கிய முன்னணி போட்டியாளர் தோழர் அநுரகுமார.

அவர் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர் அல்லர். அவர் வெளிப்படையானவர். புதிய தலைமுறையினர் அவருடன் இருக்கின்றார்கள்.

2022 எழுச்சியில் நாட்டை வங்குரோத்துக்குக் கொண்டு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டை விட்டு விரட்டிய அந்த எழுச்சியில் இந்தப் புதிய தலைமுறையினரும் பங்குதாரர்கள்.

76 வருடங்களாக எம்மை ஏமாற்றிய – இந்த நாட்டு மக்களை ஏமாற்றிய பரம்பரைகள் வாரிசுகளுக்கு மாற்றாக

எம்மைப் போல், எம் சகோதரர்கள் போல் போராடி மடிந்து, காணாமல் போன வரலாறு, சித்திரவதைகள் கண்ட வரலாறு, பாலியல் வன்கொடுமைகள் கண்ட வரலாறு, உயிருடன் எரிக்கப்பட்ட வரலாறு, தலைவர்கள் அவமானப்படுத்தப்பட்ட வரலாறு அநுரகுமாரவின் மக்கள் விடுதலை முன்னணியினருக்கு – தேசிய மக்கள் சக்தியினருக்கு இருக்கின்றது.

அரச பயங்கரவாதத்தையும் சமூக வலியையும் அவர்கள் நன்கு புரிந்து கொண்டவர்கள்.

45 வருட கால அபகீர்த்தியான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது, விசேட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவது பற்றியும் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் தோழர் அநுரகுமார சமூகம், நேர்மை, அர்ப்பணம், தன்னல மறுப்பு கொண்ட இளம் தலைவர். இன்றைய நவீன இளம் தலைமுறையின் அபிமானம் பெற்ற தலைவர் அவர்.

அவரின் சின்னம் திசைகாட்டிக்கு வாக்களிப்பது இலங்கையின் விடிவுக்கு இன சமூகங்களின் விடிவுக்கான முதல் அடிவைப்பாக அமையலாம்.

இந்த நாட்டில் இன, மத, நல்லுறவு – ஜனநாயக சமூக பொருளாதாரக் கட்டுமானத்தை உருவாக்குவதற்கான உறுதியான அத்திவாரமாக அமையும். தோழர் அநுரவுக்கு – அவரின் தேசிய மக்கள் சக்தி திசைகாட்டிக்கு வாக்களிப்போம்!” – என்றுள்ளது.

# அராஜகங்களுக்கு முடிவுகட்டிய ஒரேயொரு தலைவர் ரணிலே!

## பிரதமர் தினேஷ் தெரிவிப்பு




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சரியான தருணத்தில் நாட்டை ஏற்றுக் கொண்டு அராஜக நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பேருவளை கடற்கரை விளையாட்டரங்கில் நடைபெற்ற "ரணிலால் முடியும்" வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நாட்டில் அரசியல், பொருளாதார நெருக்கடி இருந்த காலத்தை மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். நாடு இருந்தது. ஆனால், நாட்டுக்கு ஒரு தலைவர் அன்று இருக்கவில்லை. தலைவர் இல்லாத நாட்டில் வன்முறைகள் அதிகரிக்கும். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சரியான தருணத்தில் நாட்டை ஏற்றுக்கொண்டு அந்த அராஜக நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

ஜனாதிபதிக்கு இருப்பது போல் நாட்டின் ஆட்சி அதிகாரத்தைச் செயற்படுத்திய அனுபவம் எதிர்த்தரப்பு வேட்பாளர்களுக்கு இல்லை. நாட்டின் தலைவர் ஒருவருக்கு சர்வதேச தொடர்புகள் கட்டாயமானது. அந்தச் சர்வதேச தொடர்புகள் எதிர்த் தரப்பு வேட்பாளர்கள் இருவருக்குமே இல்லை. அன்றும் சிலர் நாட்டின் ஆட்சியை அராஜகமான முறையில் கைப்பற்ற முயற்சித்தனர். அந்த முயற்சிகள் கைகூடவில்லை.

தற்போது இலங்கை தொடர்பில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நம்பிக்கை தொடர்ந்தால் மட்டுமே நாட்டின் முன்னேற்றம் நிலைக்கும். குறைந்த பட்ச வருமானம் ஈட்டுவோருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிவராணங்களை வழங்க வழி செய்திருக்கிறார்.

இன்று நாட்டில் நாளாந்தம் பல விமான சேவைகளை முன்னெடுக்கப் படுகின்றன. அந்தளவுக்கு இலங்கைக்குச் சுற்றுலாப் பிரயாணிகள் வந்து குவிகின்றனர். எனவே, நாட்டை மீட்ட தலைவருக்கு வாக்களிப்பதா? மக்களைக் கஷ்டத்தில் விட்டு தம்மைக் காப்பாறிக் கொண்ட தலைவர்களுக்கு வாக்களிப்பதா? என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்." – என்றார்.

# அநுர, சஜித்தின் கதைகளை நம்பி மக்கள் எவரும் ஏமாறவே கூடாது!

## இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார்



"அநுரகுமார திஸாநாயக்கவும், சஜித் பிரேமதாஸவும் மேடைகளில் ஆசைக் கதைகளைச் சொல்கின்றார்கள். அதனை நம்பி மக்கள் எவரும் ஏமாந்துவிடக்கூடாது."

– இவ்வாறு இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையின் அடுத்த தலைமைத்துவத்தைத் தெரிவு செய்ய இன்னும் சிறிது நாட்கள் மட்டுமே உள்ளன. இரண்டு வருடங்களுக்கு முன்பு நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. சிலர் அதனை அரசியல் நெருக்கடியாக மாற்றி பிரச்சினை மேலும் உக்கிரமடைய வழி செய்தனர்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க துணிச்சலாக முன்வந்து நாட்டு மக்களைப் பாதுகாத்தார். நாட்டுக்காக ஜனாதிபதி செய்த அர்ப்பணிப்பைப் பலப்படுத்தவே அவரோடு இணைந்து கொண்டோம். அநுரவும் சஜித்தும் மேடைகளில் ஆசைக் கதைகளைச் சொல்கின்றார்கள். அதனை நம்பி மக்கள் எவரும் ஏமாந்துவிடக் கூடாது." – என்றார்.



# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா நாளை

சரித்திரப் பிரசித்தி பெற்ற யாழ். வடமராட்சி, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம்பெறும். தொடர்ந்து சுவாமி தேரில் எழுந்தளி உலா வருவார்.

சமுத்திரத் தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கற்கோவளம் வங்கக் கடலில் இடம்பெறும். இதற்கான வசந்த மண்டபப் பூஜை மாலை 4 மணிக்கு இடம்பெற்று தீர்த்தமாடுவதற்குச் சுவாமி மாலை 5 மணிக்கு வங்கக் கடல் நோக்கி புறப்படுவார்.

மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆலய வளாகத்திலுள்ள கேணியில் பட்டுத் தீர்த்தம் நடைபெறும்.

இறுதியாக அன்றைய தினம் மாலை 5 மணிக்குக் கொடியிறக்கம் இடம்பெறுவதுடன் மஹோற்சவம் நிறைவுறும்.

தேர், தீர்த்த உற்சவங்களை முன்னிட்டு பக்தர்களின் வசதி கருதி விசேட போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஆலய சுற்றாடலிலுள்ள அன்னதான மடங்களில் அன்னதான நிகழ்வுகள் இடம்பெறும்.

# இலங்கை மக்களுக்கு ரணிலின் அருமை புரியாமல் இருக்கின்றது

## கிழக்கு ஆளுநர் செந்தில் கவலை

இலங்கை மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அருமை தெரியாமல் இருக்கின்றது என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

பேருவளை கடற்கரை விளையாட்டரங்கில் நடைபெற்ற 'ரணிலால் முடியும்' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"கடந்த இரு வருடங்கள் மிகக் கஷ்டமான காலத்தை இலங்கை கடந்து வந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றிருக்காவிட்டால் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஆயிரக்கணக்கில் உயர்ந்திருக்கும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்டெடுத்த வேகத்தில் செய்தது போல் உலகில் எவருமே செய்யவில்லை.




மலேசிய பிரதமர், மாலைதீவு முன்னாள் சபாநாயகர், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாட்டின் அரசியல் பிரதிநிகளிடம் பேசும்போதும் ரணில் விக்கிரமசிங்க போன்ற தலைவர்கள் அவர்களின் நாட்டில் இல்லை என்ற ஏக்கம் அவர்களுக்கு இருக்கின்றது. ஆனால், இலங்கை மக்களுக்கே அவரின் அருமை தெரியாமல் இருக்கின்றது.

பலர் பத்திரிகைகளில் அறிக்கை விடலாம். மேடைகளில் அழகுவார்த்தைகளைப் பேசலாம். ஆனால், நடைமுறையில் செய்ய முடியாது." என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேவை ஒரு திலீபன்

மறப் போராட்டத்தில் உச்சம் தொட்டுக் காட்டிய விடுதலை புலிகளின் மாவீரர்கள் மத்தியில், அறப் போராட்டத்தில் உச்சம் தொட்டு முகிழ்ந்தவன் தியாக தீபம் திலீபன்.

சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல், தன் உயிரைத் தானே அணு அணுவாகச் சிதைத்து, தாயக விடுதலைக்காக ஆகுதியாக தன்னை அழித்த - அளித்த - அந்தப் பெருந்தகை தனது உண்ணா நோன்பை ஆரம்பித்த தினத்தின் 37 ஆவது வருட நினைவு நாளில் இன்று நாம் நிற்கின்றோம்.

ஈழத்தமிழர்தேசத்தின்விடுதலைக்காக 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களையும் லட்சத்துக்கும் அதிகமான பொதுமக்களையும் தாரை வார்த்தும், இன்னும் அநாதரவான நிலையில் தடுமாறும் தமிழ் மக்களுக்கு தமது இன - தேச- விடுதலைக்கான போராட்டத்தைத் தொடர்வதற்கு மிஞ்சியிருக்கும் ஒரே பாதைதியாகிதிலீபன்முன்னுதாரணமாக காட்டிச் சென்ற அறவழிதான். அகிம்சை மார்க்கம்தான்.

அந்த அஹிம்சை மார்க்கத்தை - அறநெறியை - உலகுக்குக் காட்டியவர் மகாத்மா காந்தி. அவரின் காந்தி தேசத்துக்கே காந்தியம் என்பது யாது என்பதை அனுபவத்தில் போதித்துப் புகட்டியவன் தியாகி திலீபன். அறவழிப் போராட்டத்தின் உயிர்ப்பை, தன் உயிரை உவந்தளித்து உலகுக்கு உணர்த்திய உத்தமன் அவன்தான்.

உயிர்வாழ்விற்கான அடிப்படைகளில் பிரதானமானது பசியை பூர்த்தி செய்தல். பல சமயங்களில் உயிர் வாழ்வுக்காக மனிதன் பசியை பூர்த்தி செய்கிறான். சில சமயங்களில் பசியை பூர்த்தி செய்வது மட்டுமே அவன் வாழ்வாகிக் கடக்கின்றது. கழிகின்றது. இவற்றையெல்லாம் தாண்டி, பசியை - பசித்திருத்தலை - உயிர் வாழ்வுக்குரிய உரிமைக்கான ஆயுதமாக்கி, மனித இனத்தையே வியப்பில் ஆழ்த்திய பெருந்தகை திலீபன்.

ஆயுதம் தாங்கிய பெரும் விடுதலைப் போராட்டத்தின் பேரிழப்புகளுக்கும் போரிழப்புகளுக்கும் பின்னர், யாவற்றையும் துறந்து, இழந்து தடுமாறி கிடக்கும் தமிழினத்திற்கு தியாகி திலீபன் காட்டிச் சென்ற அறவழிப் போராட்ட மார்க்கமே ஒரே தெரிவு.

அறநெறிப் போராட்டம் என்பது தன்னை வருத்தும் தியாகத்தில் இருந்துதான் ஆரம்பிக்கும். ஆரம்பிக்க வேண்டும்.

பசித்திருந்து, தாகத்தோடு துடித்திருந்து, 12 நாள்கள் அவலப்பட்டு, அணு அணுவாய்த் தன்னை சிதைத்தழித்துத் தன்னுயிரையே அஹிம்சைப் போராட்டத் திற்காகத் தியாகம் செய்து, அந்தப் போராட்ட மார்க்கத்தை நம் இனத்துக்கு மட்டுமில்லாமல் உலகுக்கு வாழ்வியல் மூலம் வழிகாட்டிச் சென்ற உத்தமன் திலீபன்.

தமிழர் தேசிய அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்கு நமக்கு எஞ்சியிருக்கும் பாதை திலீபன் காட்டிய அறவழிப் பாதை மட்டுமே.

அந்த அறவழியில் போராடுவதற்கு நமது மக்களை - இனத்தை - தேசத்தை - அந்தப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு அவ்வழியில் தியாகம் செய்யும் மன உறுதியும் அர்ப்பணிப்பும், தெளிவும், திடசங்கற்பமும், துணிவும் அவசியமானவை.

அஹிம்சை மார்க்கத்திலான போராட்டம் எதுவும் சுயதியாகத்தினால் மட்டுமே கட்டி எழுப்பப்பட முடியும் என்பது தியாகி திலீபன் வாழ்ந்து, தன்னை வருத்தி, வதைத்து, வழிகாட்டிச் சென்ற நெறி.

இன்று தமிழர் தேசிய அரசியலில் தலைவர்களாகப் புறப்பட்டிருக்கும் பலரும் தங்களின் முன்னால் உள்ள போராட்டத்தை தியாகி திலீபன் காட்டிய அஹிம்சை வழியில் - காந்தியப் பாதையில் - அறநெறி மார்க்கத்தில் - அழைத்துச் செல்வதாகக் கூறத் தவறுவதில்லை. ஆனால் தன் இனத்துக்காக - தன் மக்களுக்காக - தனது மக்களின் விடுதலைக்காக - கிஞ்சித்தேனும் தியாகம் செய்ய அவர்கள் தயார் இல்லை என்பது தான் துரதிஷ்டவசமான உண்மை.

தியாகத்தின் உச்சமான திலீபன் போன்ற ஒரு வழிகாட்டி இன்று தமிழினத்தைத் தான் வாழ்ந்து, தன்னை வருத்தி, வழிப்படுத்த அவசியம் தேவைப்படுகிறான்.

# இலங்கையின் சுற்றுலாத் துறை வளர்ச்சி...!

இலங்கை சுற்றுலாத்துறை இலங்கையின் ஒரு முக்கிய தொழிற்துறை ஆகும். ஒப்பீட்டளவில் பெருந்தொகை சுற்றுலாப் பயணிகளை இலங்கை ஈர்க்கிறது. இலங்கையின் நல்ல காலநிலை, இயற்கை அழகு, கடற்கரைகள், வரலாற்று இடங்கள், பண்பாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்கிறது.

பண்பாட்டு-கலாசார ரீதியாக தமிழ்நாட்டுக்கு மிக நெருக்கமான நாடாக இலங்கை விளங்குகிறது. இந்தக் காரணத்துக்காகவும் அதன் இயற்கை அழகை ரசிப்பதற்காகவும் இந்தத் தீவு நாட்டுக்குச் செல்ல தமிழ்நாட்டு மக்கள் எப்போதும் ஆர்வம் காட்டு கின்றனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், மத வழிபாட்டுத் தலங்கள், மலைப் பிரதேசங்கள், கடற்கரைகள், காட்டுயிர் சரணாலயங்கள், தனித்து வமான-சுவையான உணவுகளுக்காக உங்களின் பயண 'லிஸ்ட்டில்' இலங்கை நிச்சயமாக இருக்கும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளை விட அபிவி ருத்தி அடைந்து வரும் நாடுகளே சுற்றுலாத் துறையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி வருமானத்தை ஈட்டுகின்றன. இதன் அடிப்படையில் இலங்கையும் தனது சுற்றுலாத்துறையை வளர்க்க பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

உல்லாசப் பயண விருத்திக்கு சிறந்த இடமாக இலங்கை காணப்படுகிறது. இலங்கையில் இயற் கையான கடற்கரைகள், ஏரிகள், நீர்வீழ்ச்சிகள், மலைத்தொடர்கள், மழைக்காடுகள், புராதன நகர சின்னங்கள், கலாசார பெருமைமிக்க இடங்களும், மானிட அமைப்புகளும் காணப்படுவதும் சுற்றுலாத் துறையை கவர்வதற்கு ஏதுவான இடமாக இலங்கை அமைந்துள்ளது.

நிலத்தோற்ற தரைத்தோற்ற வேறுபாடுகள், வேறுபட்ட காலநிலை, இலங்கை ஒரு தீவாக உள்ளமை, இயற்கை அழகு, விளம்பரங்கள் போன்ற வையும் இலங்கையின் சுற்றுலா வளர்ச்சி செல்வாக்கு செலுத்துகின்றன. இலங்கையின் சுற்றுலா வளர்ச்சியில் அரசாங்கத்தின் பங்களிப்பு முக்கியமாக குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

அந்த வகையில் உலக நாடுகளில் சுற்றுலா சார் அம்சங்களில் 13 ஆம் நிலையில் இலங்கை நாடு காணப்படுகிறது. ஆரம்பத்தில் இலங்கையின் சுற்றுலா வளர்ச்சிக்கு பிரதேச சுற்றுலா அமைப்புகளே பங்களிப்பின் வழங்கி உள்ளது. பின் 1937 இல் சுற் றுலாப் பயணிகளை ஈர்க்கும் முகமாகவும் அவர்க ளுக்கான தரமான சேவையினை வழங்குவதற்கா கவும் வுழரசளைவ டீரசநயர என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

சுற்றுலா கைத்தொழில் பாரிய வருமானத்தை உருவாக்கக் கூடிய உள்ளார்ந்த வளங்களை கொண் டிருப்பதை கருத்தில் கொண்டு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மோதல்களால் பாதிக்கப் பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் அதே போன்று முதன்மை சுற்றுலா மையங்களாக தெரிவு செய்யப்பட்ட தீவின் மத்திய பகுதிகளிலும் சுற்றுலாத் துறை அபிவிருத்தி செய்ய பல வழிமுறைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு தேசிய வருமானத்தை அதிகமாகத் தேடித் தரும் கைத்தொழில்களில் சுற்றுலா துறையும் ஒன்றாகும். எனினும் பல்வேறுபட்ட காரணங்களுக் காக சில தசாப்தங்களாக இத்துறை பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டது. ஆனால் அண்மைக் காலமாக இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததை தொடர்ந்து சுற்றுலாத்துறை வெகுவாக வளர்ச்சி




அடைய தொடங்கியுள்ளது.

இலங்கையில் கடந்த காலங்களில் குறிப்பாக 2007 மற்றும் 2008 காலங்களில் கூட வளர்ச்சி குறை வாகக் காணப்பட்டது. 2006 இல் பதிவு செய்யப்பட்ட பயணிகளை விட 2007 இல் 494,008 பயணிகளாக அமைவது அதாவது 11.7 சதவீதம் வீழ்ச்சியடைந்தது. 2008 இல் இதைவிட வீழ்ச்சி அதாவது 438,475 ஆக 11.2 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்தது.

ஒரு பயணி இலங்கைக்கு வருகை தருவதன் மூலம் ஒரு நாளைக்கு சராசரியாக 170 முதல் 180 அமெரிக்க டொலர்கள் வரை இலங்கைக்கு வருமா னம் கிடைப்பதாக கிர்மார்லி ஃபெர்னாண்டோ கூறு கிறார்.

இந்தியா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு அதிக எண்ணிக்கையில் வருகிறார்கள்.

இலங்கைக்கு வரும் சுமார் 46 சதவிகிதமான சுற்றுலாப் பயணிகள் ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் விமானங்களையே பயன்படுத்துகின்றனர். இதுவும் அந்நியச் செலாவணி வருகையைத் தரும்.

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகு முடங்கிய சுற்றுலாத்துறை 6 மாதங்களுக்குப் பிறகுதான் படிப்படியாக மீளத் தொடங்கியது. சில மாதங்களில் கொரோனா பொது முடக்கம் வந்ததால், மீண்டும் முடங்கிவிட்டது என்கிறார் கொழும்பு நகரில் ஹோட்டல்கள் நடத்தும் இந்தியரான வின்சென்ட்.

அண்மையில் 2024.09.08 இன்படி நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி இந்தியா, பிரித்தானியா , ஜேர்மன், சீனா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையே அதிகரித்து வருகின்றது.


2022 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் இலங்கை யின் வருமானத்தில் சுற்றுலாத் துறையின் பங்களிப்பு அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகிறது. தற்போது இலங்கையின் சுற்றுலா துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் மற்றும் வழங்கப்பட் டுள்ள செயற்கைகளை வீட்டின் காரணமாக சம காலத்தில் அதன் அபிரகத்தில் ஏற்றம் கண்டுள் ளது எதிர்காலத்தில் நிலைமையில் மேலும் மாற் றங்கள் ஏற்பட்டு இலங்கையின் வெளிநாட்டு நாணய வருமானத்தில் சுற்றுலாத்துறை பங்களிப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.

**செ.அபிசேகன்,**
ஊடகக் கற்கைகள்,
யாழ். பல்கலைக்கழகம்.








## பொபி சான்ட்ஸின் உண்ணா விரத போராட்டம் :

# அயர்லாந்து எழுச்சியின் அகிம்சை குரல் !

■ நவீனன்

(எங்கள் மீதான பழிவாங்கல் எங்கள் குழந்தைகளின் சிரிப்பாக இருக்கும் என்ற பொபி சான்ட்ஸின் இறுதி வரிகள், அயர்லாந்து மக்கள் அனைவருக்கும் ஒருநாள் விடிவு வரும் அப்போது தங்களுக்கு விருப்பமான சுதந்திரத்தை காண்பார்கள், எழுந்து வரும் சந்திரனை போல என்பதற்கு கட்டியம் கூறியது)

பொபி சான்ட்ஸ், அயர்லாந்தை ஆக்கிரமித்து வைத்திருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த ஒரு சாதாரண போராளி. பிரித்தானியர்களின் அதிகாரத்துக்கு எதிராக அரசியல் ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் போராடிக் கொண்டிருந்த ஐரிஸ் குடியரசு இராணுவத்தில் தன்னை இளம் வயதிலேயே இணைத்துக் கொண்டவர்.

### ஐரிஷ் விடுதலைப் போராட்டம்

ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேலான நீண்ட நெடும் வரலாற்றைக் கொண்டது. அயர்லாந்து பிரிட்டனுக்கு மேற்கே 50 மைல் தொலைவிலுள்ள ஒரு பெருந்தீவாகும். அயர்லாந்தில் அல்ஸ்டர் (Ulster), முன்ஸ்டர் (Munster), லீன்ஸ்டர் (டுநநளைவநச), கொன்னாச் (Connacht) என நான்கு பிராந்தியங்கள் உள்ளன.

இன்று இவ் அயர்லாந்து இரண்டு பகுதிகளாகப் பிரிவினை செய்யப்பட்டுள்ளது. ஒன்று அல்ஸ்டர் என்னும் பிராந்தியத்தைக் கொண்ட வட அயர்லாந்தும் மற்றது ஏனைய மூன்று பிராந்தியங்களையும் கொண்ட தென் அயர்லாந்துமாகும்.

வட அயர்லாந்து பிரிட்டனின் ஆதிக்கத்தின் கீழுள்ள ஒரு பகுதியாகவும், தென் அயர்லாந்து, அயர்லாந்துக் குடியரசாகவும் இன்று அமைந்துள்ளன. அயர்லாந்துக் குடியரசின் பரப்பளவு 26,600 சதுரமைலாகும். 1922 ஆம் ஆண்டு தென் அயர்லாந்து பிரிட்டிஷ் முடியாட்சிக்குக் கீழான சுதந்திர அரசு (Irish Free State) என்ற உரிமையைப் பெற்றது. பின்பு இது 1948 ஆம் ஆண்டு குடியரசாகியது. ஆனால் வட அயர்லாந்து ஆங்கில ஆதிக்கத்தின்கீழ் ஒரு மாகாணமாகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றது.

இதனை எதிர்த்தே ஐரிஷ் விடுதலை இயக்கத்தில் இணைந்து செயற்பட ஆரம்பித்தவுடனேயே பொபி சான்ட்ஸை பிரித்தானிய அரசு சிறைப்படுத்தியது. சட்டவிரோதமாகத் துப்பாக்கி பயன்படுத்தியது, பெருவாரியான ஆயுதங்களை பதுக்கிவைத்தது, வெடிகுண்டு வழக்கு என தொடர்ச்சியாகச் சிறையிலடைத்தது.

சிறையில் அரசியல் கைதிகள் குற்றவாளிகளை போல் கடுமையாக நடத்தப்பட்டனர். அவர்களது தார்மீக உரிமைகள் மறுக்கப்பட்டது. மனித உரிமை மீறல்களுக்கும் தொடர்ச்சியாக ஆளாக்கப்பட்டனர்.

### ஐரிஷ் எழுச்சிக்கு அகிம்சை குரல்

ஐரிஷ் குடியரசு இராணுவத்தினரை அரசியல் கைதிகளாக அங்கீகரிக்கக்கோரி இவர்கள் தமது உண்ணா நோன்பை ஆரம்பித்தனர். இவர் உண்ணா நோன்பிருந்த காலத்தில் சிறையில் இருந்தவாறே ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1981 சிறைச்சாலையில் பிரித்தானிய அரசுக்கெதிராக உண்ணா நோன்பிருந்த கைதிகளுக்குத் தலைமை வகித்தவர் பொபி சான்ட்ஸ் (Robert Gerard Sands, 'பொபி சான்ட்ஸ்' (Bobby Sands, மார்ச் 9, 1954 - மே 5, 1981). அந்த இளம் போராளி யாருமல்ல. அவரே பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராடிய பொபி சான்ட்ஸ்.

வட அயர்லாந்தில் லிஸ்பேர்ன் நகரில் உள்ள சிறையில் உண்ணா நோன்பிருந்து இறந்த அந்த இளம் போராளிக்கு அப்போது வயது 27.

அந்த இளம் போராளியுடன் சேர்ந்து பத்து பேர் இந்த உண்ணா நோன்பில் இணைந்து இறந்தனர். இவரின் இறப்பு ஐ.ஆர்.ஏ அமைப்புக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. இதன் பின் பலர் இந்த அமைப்பில் இணைந்து கொண்டனர்.

பொபி சான்சுக்கு ஆதரவாக சர்வதேச ரீதியில் ஆதரவாகப் பலத்த குரலெழுப்பப்பட்டன. இந்தப் போராட்டம் 66 நாள்களில் முடிவுக்கு வந்தது. ஆம் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி சுயநினைவற்ற நிலையிலேயே அப்போராளியின் உயிர் பிரிந்தது.

### உண்ணாவிரத போரில் பொபி சான்ட்ஸ்

பிரிட்டன் வட அயர்லாந்து என்ற பகுதியை காலனிப்படுத்தி வைத்திருப்பதையும், ஐ.ஆர்.ஏயின் போராட்டம் பிரிட்டிஷ் அரசுக்கு சவாலாக வளர்ந்து விட்டதையும் வட அயர்லாந்து பிரச்சினையில், அப்போதய பிரதமர் மார்க்கரெட் தாட்சர் ஆக்கிரமிப்பாளர்களான ஆங்கிலேய குடியேறிகளை ஆதரித்தார். விடுதலைக்காக போராடிய ஐரிஷ் மக்களை அடக்குவதில் குறியாக இருந்தார்.

தங்களை அரசியல் கைதிகளாக நடத்தவேண்டும், சிறையில் நடக்கும் மனித உரிமை மீறல்களை நிறுத்த வேண்டும் என்கிற கோரிக்கைகளை முன்வைத்து பொபிசான்ஸும் அவரது தோழர்களும் மரணித்தனர்.

பிரிட்டனில் ஐரிஷ் சிறுபான்மை இனத்தின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கிய மார்கரெட் தாட்சர், 1981 ஆம் ஆண்டு, வட அயர்லாந்தில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த பத்து அரசியல் கைதிகள் மரணத்தை தழுவிக் கொண்டமைக்கு பலத்த கண்டனங்களை எதிர் நோக்கினார்.

விடுதலைக்காக போராடும் ஐரிஷ் சிறுபான்மை இனத்தை ஒடுக்கும், பிரிட்டிஷ் கொடுங்கோன்மையை உலகம் அறியச் செய்த போராட்டம் அது. இத்த உண்ணா விரத போராட்டம் நாளுக்கு நாள் நாடு தழுவிய எழுச்சியை ஏற்படுத்தியது. உலக நாடுகள் மத்தியில் பேசு பொருளானது.

இந்த நேரத்தில் 1981 இல் ஐக்கிய இராச்சியத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறையில் உண்ணா விரதம் இருந்த நிலையிலேயே ஐரீஸ் குடியரசு இயக்கம் (Irish Republican Movement ) சார்பில் நின்று தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்ற

தொடர்ச்சி▼

# அயர்லாந்து...

தொடர்ச்சி▲

உறுப்பினரானார்.

வட அயர்லாந்து சிறைச்சாலைகளில், பத்து அரசியல் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து மரணமடைந்த போதிலும், அவர்கள் பக்கம் திரும்பியும் பாராத கல்நெஞ்சக்காரியாக தாட்சர் விளங்கினார். உண்ணாவிரதமிருந்து மரணத்தை தழுவிக் கொண்ட பொபி சாண்ட்சின் மரண ஊர்வலத்தில், பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இந்தச் செய்தி சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்து, உலகம் முழுவதும் பேசப்பட்டது. அது தாட்சர் அரசுக்கு, சர்வதேச மட்டத்தில் தலைக்குனிவை ஏற்படுத்தியது.

அதே போன்று பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான பொபிசான்ட்ஸின் போராட்டம், தேசிய இனங்களை அடிமைப்படுத்தி அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்த ஏகாதிபத்தியங்கள் அம்மக்களின் அகிம்சா வழி போராட்டங்களை எப்போதுமே கண்டு கொள்ளாது என்பது தான் உலக விதியும் வரலாறாகவும் பதிவு செய்யப்பட்டது.

பொபிசான்ட்ஸின் வீரமரணம் விடுதலைக்காக உலக மெங்கும் போராடி வரும் போராளிகளின் மனநிலையை பிரதிபலிக்கும். எங்கள் மீதான பழிவாங்கல் எங்கள் குழந்தைகளின் சிரிப்பாக இருக்கும் என்ற அவரின் இறுதி வரிகள், அயர்லாந்து மக்கள் அனைவருக்கும் ஒருநாள் விடிவு வரும் அப்போது தங்களுக்கு விருப்பமான சுதந்திரத்தை காண்பார்கள், எழுந்து வரும் சந்திரனை போல என்பதற்கு கட்டியம் கூறியது.

இதன் பின்னர் ஐரிஷ் போராட்டம் தீவிரம் அடைந்தது. 1984 ஆம் ஆண்டு, பிறைட்டன் நகரில், கன்சர்வேட்டிவ் கட்சி மகாநாடு நடைபெற்ற நட்சத்திர விடுதி, ஐசுயு யினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. அதுவரையும் சிறியளவு தாக்குதல்களில் ஈடுபட்ட ஐ.ஆர்.ஏ. மிகப் பெருமெடுப்பில் திட்டமிட்டு நடத்திய தாக்குதல் அது. அந்தத் தாக்குதலில், தாட்சர் மயிரிழையில் உயிர் தப்பியமை குறிப்பிடத்தக்கது.

# செட்டிபாளையத்தில் வரலாற்று நூல் வெளியீட்டு விழா நாளை!

( வி.ரி. சகாதேவராஜா)

‘செட்டிபாளையம் கிராம மக்களின் வாழ்வும் வளமும்’ என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை (16) திங்கட்கிழமை பிற்பகல் 2:30 மணிக்கு செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி சிதம்பரப்பிள்ளை அமலநாதன் தொகுத்த இந் நூலின் வெளியீட்டு விழா கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண ஆகியோர் கலந்து கொள்வர்.








# ஆச்சரியங்கள் நிறைந்த சோழமண்டல குளம்...!

## தொல்லியல்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தலைமையில் கள ஆய்வு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சோழமண்டல குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடப்பெயர்க ளின் தன்மைக்கேற்ப சோழர்களாலும் அதற்கு முந்தைய காலத்தில் பண் டைய தமிழர்களாலும் ஆட்சி செய்யப் பட்டு வந்திருக்கலாம் எனும் சந்தேகத் தின் அடிப்படையில் அந்தப் பகுதியின் சில முக்கியமான இடங்களில் தொல் லியல் தொடர்பான கள ஆய்வு பேரா சிரியர் ப.புஸ்பரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரனின் ஒழுங்கமைப்பி லும் மன்னார் மாவட்ட உதவி அரசன அதிபர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் தலைமை யிலும் மன்னார் சட்டத்தரணி செல்வ ராஜா டினேசனின் வழி நடத்தலிலும் இந்த கள ஆய்வானது ஆரம்பிக்கப் பட்டது.

இந்த கள ஆய்வின் போது தமிழர் களின் வாழ்வியல் தொடர்பான பல விதமான சட்டி, பானை, ஓட்டுத் தண் டுகள், சேட் எனப்படும் கல் இரும்புத் தாது பெறக் கூடிய கற்கள் போன்ற பல சான்றுப் பொருள்கள் நிலத்தின் மேல் பகுதியில் மேலதிக ஆய்வுக்hக எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த தொல்லியல் கள ஆய்வில் முன்னாள் தொல்லியல் துறை விரிவு ரையாளர் கந்தசாமி கிரிகரன், மன் னார் ஊடகவியலாளர் ஜெகன் மற் றும் இலுப்பைக்கடவை கிராமத்தைச் சார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

இந்த தொல்லியல் கள ஆய்வு தொடர்பாக பேராசிரியர் புஸ்பரெட் ணம் கருத்து தெரிவிக்கையில்,

இரண்டு வாரங்களுக்கு முன்னர் மன்னார் சோழமண்டல குளத்தை பற்றியும் அங்குள்ள காணிப் பிரச்சி னைகள் பற்றியும் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தது.

நான் காணி பிரச்சனைகளைப் பற்றி சிந்தித்ததை விட சோழமண்டல குளம் என்னும் பெயர் என்னை ஆச் சரியத்துக்கு உட்படுத்தியது.

ஏனென்றால் ஆயிரம் ஆண்டுக ளுக்கு முன்னர் சோழர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் அவர்கள் மண்டலம், நாடு,வளநாடு பற்று என்று நிர்வாக பிரிவுகளை ஏற்படுத் தியே ஆட்சி செய்து வந்திருந்தார்கள்.

அதில் மாதோட்டம் அருண்மொழித் தேவ வளநாடு என்று அழைக்கப் பட்டதை மாதோட்டத்தில் கிடைத்த கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன.

தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல்லவராயர் கல்வெட்டு மட்டிவாள் என்ற இடம் பற்றி சொல்லுகின்றது. அது மட்டுவில் நாடு என்று பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது.

இப்பொழுது இங்கே வந்த மன் னார் வந்த பொழுது பற்று என்னும் நிர்வாகப் பெயர்கள் இங்கு இருப்ப தையும் நான் அறிந்து கொண்டேன். அதே நேரத்தில் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சூலவம்சம் என்னும் பாலி இலக்கியமும் ராஜாவளி என்ற சிங் கள இலக்கியமும் இந்த சோழமண் டலம் அமைந்த பிரதேசத்தை குறிப் பிட்டு அங்கே கலிங்க அரசின் ஆதிக் கம் நிலவி இருந்தது என்று கூறியி ருக்கிறது.

இந்த சம்பவங்கள் எல்லாவற் றையும் தொகுத்து பார்த்த பொழுது சோழ மண்டல குளம் பற்றிய இடத் தில் ஆய்வு செய்ய வேண்டும் என்ற விருப்பம் எனக்கு ஏற்பட்டது .

இதற்கு மன்னார் மாவட்டச் செய லாளர் க.கனகேஸ்வரன், மன்னார் உதவி அரச அதிபர் ஸ்ரீஸ்கந்தகுமார், மன்னார் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் ,ஊடகவியலாளர் ஜெகன் போன்றவர்களின் உதவி ஆதரவோ டும் எனது மாணவனும் பல்கலைக்க ழகத்தில் தொல்லியல் விரிவுரையாள ராக இருந்த கிரிகரன் மற்றும் கள ஆய்வு நடைபெற உள்ள பிரதேச அன்பர்களின் ஒத்துழைப்போடும் நாங்கள் சோழமண்டல குளத்தையும் குளத்தை சுற்றியுள்ள பல இடங்களில் ஆய்வு மேற்கொண்டோம்.

கள ஆய்வின் போது இந்தப் பிர தேசமானது இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட ஒரு பல்லின சமூகம் வாழ்ந்த வாழ்ந்து கொண்டி ருந்த இடம் என்பதை என்னால் அடையாளப்படுத்தப் படக் கூடியதாக இருந்தது.

இங்கே பரங்கியர் குளம் பரங்கிய காமம் காணப்படுகிறது. இவை 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் வட இலங்கை மீது படையெடுத்த போது மன்னார் மாவட்டம் அவர்களுடைய முதல் ஆதிக்கத்துக்கு விழுந்த இடம். அதன் விளைவாக இந்தச் சமூகம் ஒன்று எங்கே குடியேறி இருந்திருக்க வேண்டும்.

அதே நேரத்தில் இங்கிருந்த நெல் லுக்கும் யானை மற்றும் யானைத் தந்தத்தங்களைப் பெறுவதில் போர்த் துக்கேயரின் ஒரு நோக்கமாக இருந் தது. இதனால் அவர்களுடைய ஆதிக் கம் இங்கு இருந்ததை அடையாளப் படுத்தக் கூடியதாக உள்ளது.

அதற்கு அப்பால் வண்ணாங்குளம், பறையர் குளம் அம்பட்டன் குளம், முதலியார் குளம் போன்ற பல்வேறு குளங்கள் சோழமண்டலக் குளத்தைச் சுற்றி வட்டாரத்தில் இருப்பதை எம் மால் அறிந்து கொள்ள முடிந்தது.

இந்த ஆய்வின்போது நாங்கள் ஒரு நாளிலே ஒரு இடத்துக்குச் சென்று அந்த இடம் பற்றி முழு மையான வரலாற்று உண்மை என அறிந்து கொள்வது கடினமான விடயம்.

தொடர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்று ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டது. ஆராயப்பட வேண்டிய ஒன்று ஆனால் எங்களு டைய கள ஆய்வில் சோழமண்டலம் கண்ணாட்டி செபஸ்தியார் கோயில் போன்ற இடங்களில் கூடுதலாக எங்கள் கள ஆய்வுகளை மேற் கொண்டிருந்தோம்.

மிகவும் ஆச்சரியமான விடயம் என்னவென்றால் நான் கட்டுக்கரை யில் சாஸ்திரி கூலாங்குளத்தில் ஆய்வுகளை மேற்கொண்ட போது எவ்வாறு ஒரு பழமையான குடி யேற்ற ஆதாரங்கள் கிடைத்தனவோ அதேபோல் யாழ்ப்பாணத்தில் கந்த ரோடை ஆனைக்கோட்டை சாட்டி, பூநகரி போன்ற இடங்களில் எவ்வா றான பழமையான சான்றாதாரங்கள் கிடைத்ததோ இங்கும் அவை போன்று கிடைத்தது.

குறிப்பாக ஆதி இரும்பு பண்பாட் டோடு தொடர்புடையது என்று கருதக் கூடிய 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பிரதேசம் மக்கள் குடி யிருப்பு களாக இருந்தது என்பதை உறுதிப் படுத்தக் கூடிய பல வகையான வடி வங்களில் அமைந்த மண்பாண்ட ஓடுகள் எம்மால் கண்டுபிடிக்க கூடிய

தொடர்ச்சி▼

# ஆச்சரியங்கள் நிறைந்த சோழமண்டல குளம்...!

தொடர்ச்சி▲

தாக இருந்தது.

தென் தமிழகத்தில் இலங்கையிலும் இரும்பினுடைய அறிமுகத்தோடு தான் நாகரிகமும் நிலையான குடியிருப்புகள் தோன்றியன. அத்தகைய இரும்பின் பயன்பாடு இங்கே இருந்தது என்பதை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் அயன் ஸ்லாட் என்னும் இரும்பு தாது பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சில மண்பாண்ட விளிம்புகள் போன்றவற்றை வைத்துக் கொண்டு அவை கிறிஸ்தவ சகாப்தத்துக்குச் சற்று முன்பாக இங்கே மக்கள் வாழ்ந்திருக்கலாம் என்ற உண்மைகள் எனக்கு தெரிய வந்துள்ளது.

பொதுவாக வன்னிப் பிரதேசம் யாழ்ப்பாணப் பிரதேசம் போன்றவற்றை காட்டிலும் எங்கே ஒரு தொன்மையான நாகரீகம் இருந்திருக்கின்றது என்னும் கருத்து பல தொல்லியல் அறிஞர்கள் முன் வைக்கப்படுகிறது.

இங்கே 3000 இற்கும் மேற்பட்ட குளங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சிறு சிறு குளங்கள் பல மறைந்து விட்டன. இந்த குளங்களைச் சுற்றி மக்கள் குடியிருப்புகள் இருக்கிறது



என்பதை விவசாய தேவைகளுக்கு அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நிலத்தை பண்படுத்தும் போது அதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அதேபோல் சோழமண்டல குளம் அதன் சுற்று வட்டாரங்களிலும் இத்தகைய குடியிருப்புகள் ஆதி இரும்பு காலப் பண்பாட்டோடும் பயன்பாட்டோடும் தோன்றி இருக்கலாம் என்பது இப்போது கிடைத்த தொல்பொருள் சான்றுகள் மூலம் எங்களால் அந்த முடிவுக்கு வரக் கூடியதாக உள்ளது.

இதற்கு பறையன்குளம,; குசவன் குளம், பறங்கியாறு முக்கிய காரணமாக இருக்கின்றன.

எப்படி அனுராதபுரத்தில் ஒரு தொன்மையான நாகரீகம் உருவாகி வளர்வதற்கு மல்வத்து ஓயா ஒரு காரணமாக இருந்திருக்கின்றதோ இந்தப் பிரதேசத்திலே தொன்மையான நாகரீகம் உருவாகுவதற்கு பறங்கியாறும் ஒரு முக்கிய காரணமாக அமையலாம் என்பது என்னுடைய கருத்து.

இந்தக் கருத்தை நாம் மேலும் உறுதிப்படுத்துவதற்கு இந்தப் பிரதேசத்தில் சில அகழ்வாய்வுகள் மேற்கொள்ள வேண்டி இருக்கிறது.

அதற்கான சூழ்நிலைகள் அமையும் போது பல்கலைக்கழக மாணவர்கள் ஆசிரியர்களாலும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படலாம் என்ற ஒரு நம்பிக்கை உள்ளது .- என்றார்.





# தேசிய ரீதியில் நடைபெற்ற போட்டியில் மன்னார் ஆஸ்பத்திரிக்கு இரு விருதுகள்

(வாஸ் கூஞ்ஞ)

நோயாளிகள் பாதுகாப்பு சம்பந்தமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்திய வைத்தியசாலைகளுக்கு இடையில் தேசிய ரீதியில் இடம்பெற்ற போட்டியில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இரு சிறப்பு விருதுகள் கிடைத்துள்ளன.

உலக சுகாதார நிறுவனத்தால் வருடந்தோறும் அனுஷ்டிக்கப்படும் சர்வதேச நோயாளர் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சின் சுகாதாரத் தரம் மற்றும் பாதுகாப்பு பணியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நிகழ்வானது கொழும்பு மரினோ பீச் விடுதியில் நடைபெற்றது.

நோயாளிகள் பாதுகாப்பு சம்பந்தமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்திய வைத்தியசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற போட்டியில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இரண்டு சிறப்பு விருதுகள் இந்த நிகழ்வில் கிடைக்கப் பெற்றுள்ளன.

அகில இலங்கை ரீதியில் இருநூற்றுக்கும் மேற்பட்ட மத்திய மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களுக்குள் இடம்பெற்ற போட்டியில் வட மாகாணத்திலிருந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை மாத்திரமே இந்தச் சிறப்பு விருதை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கான பிரதிநிதி டாக்டர் அலோகா சிங்கா , சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் பாலித மஹிபால மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம். ஹனிபா, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான இந்த விருதுகளை பெற்றுக்கொண்டார்.

# கேரளாவில் உலக சிலம்பப் போட்டியில் இலங்கை மாணவிகள் மூவர் பங்கேற்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இந்தியா கேரளாவில் நடைபெறவுள்ள உலக சிலம்பம் போட்டியில் இலங்கை மாணவிகள் மூவர் ங்கேற்கவுள்ளனர்.

மாஸ்டர் தயா பெரேரா மற்றும் மாஸ்டர் சிவராஜா ஆகிய இருவரின் தலைமையில் நடைபெறும் சோடோக்கான் கராத்தே பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்று வரும் மாணவிகளே இவ்வாறு செல்லவுள்ளனர்.



கண்டி, தெல்தோட்டை மலைமகள் இந்து கல்லூரியின் பழைய மாணவியான செல்வி எம். இந்துஷா மற்றும் அக் கல்லூரியில் கல்வி பயிலும் ஐ. சௌஜன்யா மற்றும் கண்டி, கலஹா ராமகிருஷ்ணா மத்திய கல்லூரியின் பழைய மாணவி பிரியங்கா கல்யாணி ஆகிய மூன்று மாணவிகளும் இதில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தியாவில் கேரளாவில் நடக்கவிருக்கும் உலக சிலம்பம் போட்டியில் இலங்கை சிலம்பம் சம்மேளனத்தின் தலைவர் மாஸ்டர் திருச்செல்வம் மற்றும் செயலாளரான மாஸ்டர் தினேஷ் மாஸ்டர் சிவராஜா ஆகியோர் தலைமையில் இந்த மூன்று மாணவர்களும் பங்குபெறவுள்ளனர்.





# பொத்துவில் மத்திய கல்லூரியில் மீண்டும் பற் சிகிச்சைப் பிரிவு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொத்துவில் மத்திய கல்லூரியின் அதிபர் எம்.எஸ்.நபீஸ் முஹம்மத்தின் வேண்டுகோளுக்கமைய பாடசாலையில் நீண்ட காலமாக இயங்காமல் கைவிடப் பட்ட பற்சிகிச்சைப் பிரிவை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் உதவியுடன் இடம் பெற்று வருகின்றன.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஸஹீலா இஸ்ஸதீன், பிராந்திய பற்சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் ஹபீப் ஆகியோரின் உதவியுடன் பொத்துவில் மத்திய கல்லூரியின் பற்சிகிச்சைப் பிரிவுக்குப் புதிதாக பற்சிகிச்சை நிபுணர ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இயந்திரங்கள் மீள் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டு உயிரியல் மருத்துவ பிரிவின் பொறியியலாளர் முஹம்மட் இப்ஹாமின் உதவியுடன் பொருத்தப்பட வுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருமலை, தோப்பூர் அல்ஸிபா சாதனை மாணவர் கௌரவிப்பு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கணித ஒலிம்பியாட் தேசிய மட்ட போட்டியிலும் , ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து சாதனை படைத்த தோப்பூர் அல்ஸிபா வித்தியாலய மாணவன் பாஜீத் அன்சித் அஹமட்டையும் , 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறு களை பெற்ற ஏனைய மாணவர்களை யும், கற்பித்த ஆசிரியர்களையும் கௌர விக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் என். எம்.பாஜித் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மாணவர் தலைவர்க ளுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் மூதூர் வலயக் கல்வி பணிப்பாளர், பிரதி கல்வி பணிப்பாளர், உதவி கல்வி பணிப்பாளர், தோப்பூர் கோட்டக்கல்வி பணிப்பாளர், அல்சிபா வித்தியாலயத்தின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# தேர்தல் காலத்தில் அடிப்படை உரிமை மீறினால் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் செய்ய முடியும்!

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ்

(பாறுக் ஷிஹான்)

தேர்தல் காலத்தில் அடிப்படை உரிமை மீறினால் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் செய்ய முடியும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கல்முனை பிராந்திய இணைப் பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,




தேர்தல் காலத்தின் போது, தேர்தல் சட்டங்கள், நாட்டின் ஏனைய சட்டங்கள், நாட்டின் அரசியல் அமைப்புக்கு இணங்க அந்தத் தேர்தல் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் கடமைப்பட்டுள்ளனர். இது ஒவ்வொரு விடயத்திதுக்கும் பொறுப்பான அரச உத்தியோகத்தர்கள், அந்தச் சட்டங்களுக்கமைவாக தங்களது கடமைகளை நியாயமானதாகவும் பக்கச்சார்பின்றியும் செய்வதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பு யாப்பின்படி, மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை, சுதந்திரமாக அரசியலில் ஈடுபடும் உரிமை, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான உரிமைகளுடன் சட்டத்துக்கு முன் யாவரும் சமம் என்பதையும் உறுதிப் படுத்தியுள்ளது.

ஓவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் அரசியல் அமைப்பிற்கு அமைவாக செயற்படுவதற்கு உறுதிமொழி செய்துள்ளனர். அரச உத்தியோகத்தர்கள் கொண்டுள்ள சட்ட ரீதியான கடமைகளையும், பொறுப்புக்களையும் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது நடவடிக்கை மேற்கொள்ளாமல் விடல் பக்கச்சார்பாகச் செயற்படல் அரசியல் அமைப்பு யாப்பின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

அவ்வாறு மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குப் புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளை நடத்துவதற்கு மற்றும் அவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

இந்த அடிப்படையில் எமது பிராந் தியத்தில் தேர்தல் நடைபெறுவதற்கு முன், தேர்தல் தினத்தன்று அல்லது தேர்தலின் பின்னர் அரச, நிர்வாக, நிறைவேற்றுத் துறையினர் அடிப்படை உரிமையை மீறியதற்கான அல்லது மீறப்படுவதற்கான ஏதுக்கள் இருக்குமாக இருந்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை அலுவலகத்தில் முறைப்பாடு செய்ய முடியும்.- என்றார்.

# ஒலுவில் அல்-ஹம்றா மாணவி தங்கம் வென்று சாதனை!

(எஸ்.அஷ்ரப்கான்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டி-2024 இல் ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவி ஆர்.எப்.ஸமா தட்டெறிதல் போட்டியில் முதல் இடம் பெற்று தங்கம் வென்று சாதனை நிலைநாட்டினார்.



மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு வெற்றி பெற வழியமைத்த அதிபர் அஷ்-ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம், பிரதி, உதவி அதிபர்களுக்கும் மாணவர்களை பயிற்றுவித்து அழைத்துச்சென்ற விளையாட்டுப் பொறுப்பாசிரியரும் இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் பயிற்றுப்விப்பாளருமான ஆர். நௌசாட், விளையாட்டுப் பயிற்றுவிப் பாளர் ஏ.அஸ்மத் சஹி மற்றும் பல வழிகளிலும் ஆலோசனைகள் வழங்கி உதவிய உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.கியாஸ், இணைப்பாடவிதானத்திற்கு பொறுப் பான பிரதி அதிபர் ஜே.வஹாப்தீன் ஆகியோருக்கு பாடசாலைச் சமூகம் நன்றி தெரிவித்துள்ளது.



# சிறுவர் உலகில் நிறங்களான நீல வானம் பட்டத் திருவிழா!

(பழுவூரான்)

சிறுவர் திறன் வளர்ச்சிக்கான கலையூடான செயற்பாட்டை ஊக்கப்படுத்தும் வகையில் அழகிய சிறுவர் கழக சிறார்களுக்களின் பங்குபற்றுதலுடன் பட்டத் திருவிழா பாசிக்குடா கடற்கரையில் இடம்பெற்றது.

பிரதேச சிறுவர் சபைத் தலைவர் செல்வன் வீ.அரோஜன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கோற ளைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ஜெயானந்தி திருசெல்வம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அத்தோடு இந்த நிகழ்வில் பதவி நிலை அதிகாரி, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், விளையாட்டு உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கு பற்றியிருந்தனர்.

07 சிறுவர்கழக சிறார்களின் பட்டங்கள் வானில் ஏற்றப்பட்டன. பங்குபற்றிய அனைத்து சிறவர்களுக்கும் அதிதிகளால் பரிசுகள் வழங்கப்பட்டனர்.

நிகழ்வில் சிறுவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.





# யுனிசெப் நிறுவனத்தால் உதவிப் பொருள் வழங்கல்

(சர்ஜுன் லாபீர்)

யுனிசெப் மற்றும் உளநல உதவி நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கான பயனாளிகளுக்கு உலர் உணவு பொருள்கள், கற்றல் உபகரணங்கள், சைக்கிள்கள் மற்றும் சிறுவர் கழகங்களுக்கு நூலகம் அமைப்பதற்கு தேவையான கதிரைகள், மேசைகள், புத்தகங்கள் ஆகியன வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டு உதவிப் பொருள்களை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம். அஸ்லம், கணக்காளர் எஸ். எல். சர்த்தார் மிர்ஸா, உளநல உதவி நிலையத்தின் நிறுவனத்தின் இணைப்பாளர் ஐ.ஜே. சில்வஸ்டார், மாவட்ட இணைப்பாளர்களான எம். நிஸாம், பிரதேச இணைப்பாளர் எல்.நந்தன், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஓ.கே.எப். சரீபா, பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களான எம்.ஐ.எம் கரீமா, ஏ.ஜே. குறைசா மற்றும் கிராம சேவகர்களான ஐ.எல்.எம் ஒஜிஸ்கான், ஏ.எம் சித்தி பஸ்ரியா, எம். ஜலால் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# பாடசாலைகளிடையே பான்ட் போட்டி; மன்னார் சவேரியார் ஆண்கள் வெற்றி!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு இடையிலான பான்ட் இசை போட்டியானது இராணுவத்தின் 54 காலாட்படையின் ஏற்பாட்டில் மன்னார் பொது விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த 15 பாடசாலைகள் கலந்து கொண்ட நிலையில் பல்வேறு தகைமையின் அடிப்படையிலும் பிரிவுகளிலும் போட்டிகள் இடம் பெற்றன.

போட்டிகளில் மதிப்பெண்களின் அடிப்படையில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாவட்ட ரீதியாக முதலிடம் பெற்று கொண்டது.

அதேநேரம் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி இரண்டாம் இடத்தையும் மன்னார் வெள்ளாங்குளம் பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.




போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்று கொண்ட அணியினருக்கு இராணுவத்தினரால் வெற்றி கிண்ணங்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.





# நிந்தவூர் அல் அஸ்றக்கின் 78 ஆவது ஆண்டு நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலையின் 78 ஆவது ஆண்டு நிறைவைமுன்னிட்டு நிகழ்வுகள் பாடசாலையின் காசிமியா மண்டபத்தில் இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் ஏ.ஏ.கபூர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினரும் எல்.ஓ.எல்.சி. நிறுவனத்தின் கிழக்கு பிராந்திய உதவி முகாமையாளருமான ஏ.எல்.எம்.பாயிஸ், பழைய மாணவர் சங்க உப தலைவரும், இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய பிரதம பொறியியலாளருமான ஏ.எம். ஹைகல் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது 78 ஆவது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்ட ஸ்டிக்கர், பேனை என்பன அதிதிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.



# இஸ்லாமிய பொற்காலம் கவிதை நூல் வெளியீடு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

சாய்ந்தமருது டாக்டர் எம்.நளிமுதீன் எழுதிய 'இஸ்லாமிய பொற்காலம்' கவிதை நூல் வெளியீட்டு விழா மாளிகைக்காடு பாவா ரோயல் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுதீனின் நெறியாள்கையில் ஏ. ஆர்.மன்சூர் பௌண்டேஸன் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதேசத்திலுள்ள இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நூல் வெளியீட்டின் மூலம் கிடைத்த பண அன்பளிப்புகள் நாணல் பெண்கள் இலக்கிய வட்டத்துக்கு வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## 60 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கம் வென்ற மாணவன்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவன் ஏ.ஆர்.எம்.றிஹாப் கிழக்கு மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டியில் தங்கப் பதக்கத்தை பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளார்.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவன் ஏ.ஆர்.எம்.றிஹாப் (14 வயது) ஆண்கள் பிரிவில் 60 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்து கல்லூரிக்கு பெருமையை தேடித்தந்துள்ளார். தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவாகியுள்ளார்.

## தட்டெறிதலில் சாதனை முறியடிப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாண ரீதியிலான ஏற்கனவே 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் நிகழ்வில் ஏற்படுத்தப்பட்டிருந்த 35.52 மீற்றர் தூரம் எனும் சாதனையை காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவன் எம்.எப்.அதிப் அஹமட் 36.41 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியிலேயே இச்சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தங்கப்பதக்கம் வென்று தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.







# விபுலானந்த அழகியல் நிறுவக 16 ஆவது புகைப்படக் கண்காட்சி

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு பல்கலைக்கழக மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் 16 ஆவது புகைப்படக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக வளாகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மண்ணின் வாழ்வியல் மற்றும் கலை கலாசாரத்தை மையப்படுத்தி பற்றி மீடியா இணையத்தளத்தின் பணிப்பாளர் எம்.சிவகுமாரால் பிடிக்கப்பட்ட புகைப்படங்களே இங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் போராசிரியர் பாரதி கெனடி புளோரன்ஸ் தலைமையில் இடம்பெற்ற



இந்த நிகழ் விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

இந்தப் புகைப்படக் கண்காட்சியில் விசேட அதிதியாக மட்டக்களப்பு - கல்லடி 243 ஆவது இராணுவ படைப்பிரிவின் பிறிக்கேட் கொமாண்டர் சந்திம குமார சிங்க கண்காட்சியை ஆரம்பித்து வைத்துள்ளார்.

# நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவன் 02 தங்கம் வென்று சாதனை!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டி-2024இல் நிந்தவூர் நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவன் எம்.எச். முஹம்மது ஹின்ஸான் (12 வயது) ஆண்கள் பிரிவில் 60 மீற்றர் மற்றும் 100 மீற்றர் ஆகிய இரண்டு ஓட்ட நிகழ்ச்சிகளிலும் முதலிடங்களைப் பெற்று 02 தங்கங் களை வென்றுள்ளார்.

பாடசாலையின் அதிபர் ஏ. அப்துல் கபூர், வெற்றி பெற்ற மாணவனை வாழ்த்துவதோடு, இதற்காக உழைத்த அனைத்து விளையாட்டு பொறுப்பாசிரியர்களுக்கும் இணைப்பாடவிதானத்துக்கு பொறுப்பாக இருந்து ஒருங்கிணைக்கும் உதவி அதிபர்கள், மாணவனின் பெற்றோர்கள் உட்பட்ட கல்வி சார் மற்றும் சாரா சமூகத்தினருக்கு நன்றியையத் தெரிவித்துள்ளார்.





# 7,616 கோடி ரூபா முதலீட்டில் 19 ஒப்பந்தங்கள் கையெழுத்து

## சென்னை திரும்பிய முதல்வர் ஸ்டாலின் தகவல்

அமெரிக்க பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின், .7,616 கோடி ரூபா மதிப்பில் 11,516 பேருக்கு வேலையளிக்கும் 19 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் பயணம் வெற்றிகரமாகவும், சாதனைக்கு உரியதாகவும் இருந்தது என்றும் பெருமிதம் தெரிவித்தார்.

தமிழகத்துக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க, முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஓகஸ்ட் 27 ஆம் திகதி அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். அங்கு சான்பிரான்சிஸ்கோ, சிகாகோ மாகாணங்களில் பல்வேறு தொழில் முதலீட்டாளர்கள், முன்னணி நிறுவனங்களின் தலைவர்களைச் சந்தித்து தமிழகத்தில் முதலீடு செய்ய வரும்படி அழைப்பு விடுத்தார்.

இந்த பயணத்தில் 19 நிறுவனங்களுடன் 7,616 கோடி ரூபா மதிப்பிலான முதலீடுகளுக்கு முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 2 மாகாணங்களில் தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், தமிழர்களை சந்தித்து உரையாடினார்.

இதையடுத்து, முதல்வர் ஸ்டாலின் தனது பயணத்தை முடித்துக்கொண்டு கடந்த 12 ஆம் திகதி டுபாய் சென்றார். அதைத்தொடர்ந்து, நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு சென்னை விமான நிலையம் வந்து சேர்ந்தார். அங்கு முதல்வரை, துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர்கள், டி.ஆர். பாலு, ராசா உள்ளிட்ட எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், தி.மு.க .நிர்வாகிகள், தொண்டர்கள், அரசு அதிகாரிகள் வரவேற்றனர்.

அப்போது முதல்வர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“அமெரிக்காவில் உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக் கொண்டு, சென்னை திரும்பியுள்ளேன். இது வெற்றிகரமான, சாதனைக்குரிய பயணமாக அமைந்துள்ளது. உலக நாடுகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் தங்கள் தொழில் முதலீடுகளை செய்ய வைப்பதற்கான முயற்சியாக, கடந்த ஓகஸ்ட் 28 ஆம் திகதி அமெரிக்கா சென்றேன். கடந்த 12 வரை அங்கு இருந்துள்ளேன். உலகின் புகழ்பெற்ற தலைசிறந்த 25 நிறுவனங்களைச் சேர்ந்தவர்களை சந்தித்தேன்.

இதில், 18 நிறுவனங்கள், பார்ச்சூன் 500 நிறுவனங்களுடன் இந்த சந்திப்பின்போது 19 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. சான்பிரான்சிஸ்கோவில் 8 நிறுவனங்களுடனும், சிகாகோவில் 11 நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இந்த 19 ஒப்பந்தங்கள் மூலம் 7,616 கோடி ரூபா முதலீடு வந்துள்ளது. இதன் மூலம் 11,516 பேருக்கு புதிய வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முதலீடுகள் திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு என பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன.

கடந்த ஓகஸ்ட் 29 ஆம் திகதி சான்பிரான்சிஸ் கோவில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், 100 இற்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள், நிறுவனத் தலைவர்கள் பங்கேற்றனர். தமிழகத்தை ஒரு டிரில்லியன் டொலர் பொருளாதாரமாக மாற்றும் இலக்கை நோக்கி முன்னேறுவதற்கான பணியில் தமிழக அரசுடன் சர்வதேச நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். இன்னும் பல நிறுவனங்கள் தமிழகத்துக்கு வருங்காலத்தில் வர விருப்பம் தெரிவித்துள்ளன.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போல், தமிழகத்தில் 30 ஆண்டுகள் செயல்பட்டு, தவிர்க்க இயலாத காரணம் மற்றும் சில சூழல்களால் உற்பத்தியை நிறுத்திய ஃபோர்டு நிறுவனம், எங்கள் வேண்டுகோளை ஏற்று சென்னை மறைமலை நகர் தொழிற்சாலையில் மீண்டும் உற்பத்தியை தொடங்க முன்வந்துள்ளது.

தமிழகம் சார்பிலும் தமிழக மக்கள் சார்பிலும் இந்த முடிவை மகிழ்ச்சியுடன் வரவேற்றதோடு, ஃபோர்டு நிறுவனத்தினர் உற்பத்தியை தொடங்குவதற்கான எல்லா உதவிகளையும் செய்து தருமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

‘நான் முதல்வன்’ திட்டம் மூலமாக தமிழக இளைஞர்களுககு திறன் மேம்பாடு பயிற்சி அளித்து அதன்மூலம் வளமான எதிர்காலத்தை உருவாக்கும் வகையில், செயற்கை நுண்ணறிவு குறித்த பயிற்சி வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கூகுள் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட உள்ளது.

ஆட்டோ டெஸ்க் நிறுவனத்துடன் தமிழக இளைஞர்களின் திறன் மேம்பாட்டுக்காகவும், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள், புத்தாக்க நிறுவனங்களிடையே தொழில்துறை சுற்றுச் சூழல் போட்டி தன்மையை உருவாக்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் தமிழகத்தில் தொழில் தொடங்க உகந்த சூழல் நிலவுவது மட்டுமின்றி, உலக முதலீட்டாளர்கள் முதலீடு மேற்கொள்ள விரும்பும் மாநிலமாக தமிழகம் திகழ்வது நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் 31ஆம் திகதி சான்பிரான்சிஸ் கோவிலும், செப்டெம்பர் 7 ஆம் திகதி சிகாகோவிலும் தமிழ் கூட்டமைப்பு, தமிழ்ச்சங்கங்கள் சார்பில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றினேன். அமெரிக்க தமிழர்களுக்கும், ஒப்பந்தங்கள் செய்த நிறுவனங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.”- என்றார்.



# இலங்கை அரசைக் கண்டித்து தமிழக மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை மொட்டையடித்து அனுப்பியதால், இலங்கை அரசைக் கண்டித்து தங்கச்சிமடத்தில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த மாதம் 27 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற ஒரு விசைப்படகையும், அதிலிருந்த 8 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டியதாக கைது செய்து, யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

சிறை தண்டனைக்குப்பின் இவர்களின் வழக்கு கடந்த 5 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்தபோது வழக்கை விசாரித்த நீதிபதி, ராஜா, சசிக்குமார், மாரி கிங்ஸ்டன், மெக்கான்ஷ் ஆகிய 5 மீனவர்களை விடுதலை செய்ததுடன், தலா 50 ஆயிரம் ரூபா அபதாரம் செலுத்தவும் உத்தரவிட்டார்.

மேலும் கணேசன, சேசு, அடைக்கலம் ஆகிய 3 மீனவர்கள் இரண்டாவது முறையாக எல்லைதாண்டி வந்தனர் என கூறி ஆறு மாதங்கள் கடுங்காவல் தண்டனையும், அவர்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா அபதாரமும் கட்ட உத்தரவிட்டார்.

இதனையடுத்து 3 மீனவர்களும் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட 5 மீனவர்களுக்கு உறவினர்கள் கடன் வாங்கி 7 ஆம் திகதி பணத்தை செலுத்தியுள்ளனர். ஆனால் 6 ஆம் திகதி அபதாரத் தொகை செலுத்தவில்லை என சிறைத் துறையினர் அவர்களை கைவிலங்கிட்டு மொட்டை அடித்தும், இலங்கை கைதிகள் அடைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை கழிவறைகளை சுத்தம் செய்ய வைத்து, வளாகத்திலுள்ள கழிவுநீர் கால்வாய்களையும் சுத்தம் செய்ய வைத்து கொடுமைப் படுத்தினர் என சொந்த ஊர் திரும்பிய மீனவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

மீனவர்கள் மொட்டை அடிக்கப்பட்டு வந்ததை கண்ட அவர்களின் குடும்பத்தினர் கதறி அழுதனர். இதற்கு மீனவர்கள் தரப்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து இலங்கை அரசாங்கத்தின் தொடர் அத்துமீறல் மற்றும் மனித நேயமற்ற செயலை கண்டித்தும், மத்திய அரசு மீனவர்கள் பிரச்சனையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் மௌனம் காப்பதற்கு கண்டனம் தெரிவித்தும், இராமேஸ்வரம் – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் தங்கச்சிமடம் பஸ் நிறுத்தம் அருகே மீனவர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மீனவ சங்க நிர்வாகிகள் மற்றும் மீனவர்கள், அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

மீனவர் சங்க தலைவர் எமரிட் கூறும்போது, "மொட்டை அடிக்கப்பட்டவர்கள் தமிழக மீனவர்கள் தான் என எண்ண வேண்டாம், எங்களுடைய வரிப் பணத்தில் வாழும் இலங்கை அரசு எங்கள் மீனவர்களை மொட்டை அடித்து மனித நேயமற்ற அரக்கர்களாக கொடுமைப்படுத்தி உள்ளனர். மத்திய அரசு இதையும் வேடிக்கை பார்ப்பது நல்லதல்ல. இது இந்தியாவை அவமானப்படுத்தியதாகத் தான் நாங்கள் கருதுகிறோம்.

ஆகவே, இதுவரை இலங்கை கடற்படை எங்களை அடித்து கொடுமைப் படுத்தியது, படகுகளை சிறை பிடித்தது, அதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தோம். ஆனால் இனிமேலும் இவ்வாறான மனிதநேயமற்ற செயலை பொறுத்துக் கொள்ள மாட்டோம். ஆகவே மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழகம் தழுவிய மாபெரும் போராட்டங்களை தொடர்ச்சியாக மத்திய அரசுக்கு எதிராகவும், இலங்கை அரசுக்கும் எதிராகவும் நடத்துவோம்" என்றார்.



# காசாவில் இஸ்ரேலின் கோர தாக்குதல்: ஐ.நா. ஊழியர்கள் 10 பேர் உயிரிழப்பு

பலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஐ.நா. ஊழியர்கள் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் பலஸ்தீனத்தின் காசா பகுதி இஸ்ரேலிய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

இந்த கட்டுப்பாடுகளை எதிர்த்து, ஹமாஸ் எனும் பலஸ்தீன விடுதலை அமைப்பானது கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி, இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதலை நடத்தியது.

போரில் இதுவரை 41 ஆயிரத்துக்கும் அதிகமான காசா மக்கள் கொல்லப்பட்டதுடன், இது காசா மக்களின் மொத்த மக்கள் தொகையில் 1.7 சதவிகிதமாகும்.

இஸ்ரேல் தாக்குதலில் ஐ.நா ஊழியர்களே படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். பலஸ்தீனிய அகதிகளுக்கான ஐ.நா. முகவரகம் மத்திய காசாவில் பாடசாலை ஒன்றை நடத்தி வருகிறது.

இந்த பாடசாலையின் மீது கடந்த புதன் கிழமை தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதில் 6 ஐ.நா. ஊழியர்கள் கொல்லப்பட்டனர் என சொல்லப்பட்டது.

இந்த நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை 10 ஆக உயர்ந்திருக்கிறது.

இந்த தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.






# நைஜீரியா படகு கவிழ்ந்து விபத்து 64 விவசாயிகள் பலி; 6 பேர் மீட்பு

நைஜீரியாவில் 70 இற்கும் மேற்பட்ட விவசாயிகளை ஏற்றிச் சென்ற மரப்படகு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவித்துள்ளன.

வடமேற்கு நைஜீரியாவில், ஜம்பாரா மாநில விவசாயிகள் தங்களுடைய விவசாயப் பணிகளுக்காகத் தினந்தோறும் ஆற்றினை கடந்து செல்கிறார்கள்.

அந்த வகையில் 70 பேர் படகில் சென்ற போது திடீரென ஆற்றில் கவிழ்ந்தது. இதில் விவசாயிகள் 64 பேர் நீரில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்தனர். 6 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

இந்த விபத்து அந்த நாட்டில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# பங்களாதேஷ் நிலச்சரிவில் சிக்கி 6 பேர் பலி; மக்கள் வெளியேற்றம்





பங்களாதேஷத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கனமழை காரணமாகத் தென்கிழக்கு காக்ஸ் பஜார் மாவட்டத்தில் நிலச்சரிவில் சிக்கி 6 பேர் பலியாகியுள்ளனர்.

டாக்காவிலிருந்து தென்கிழக்கே 392 கி.மீ. தொலைவில் உள்ள காக்ஸ் பஜார் மாவட்டத்தில் உள்ள ஏதிலிகள் முகாமில் இந்நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் குறைந்தது ஒரு ரோஹிங்கியா குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உள்பட 6 பேர் உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நிலச்சரிவு முகாமில் குறைந்தது 3 குடிசைகளை அழித்தது.

இதனைத் தொடர்ந்து, ஆபத்தான சரிவுகளில் வசிப்பவர்களை வெளியேற்றும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 1, 000 மிஸ்ட் கோல் செய்த காதலிக்கு சிறைத் தண்டனை





பிரித்தானியாவில், முன்னாள் காதலனைத் தொடர்ச்சியாகத் தொல்லை செய்து வந்த பெண்ணுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சோபி கால்வில் என்ற 30 வயதுடைய பெண்ணை டேவிட் பாக்லீரோ என்ற நபர் காதலித்து வந்துள்ளார்.

அண்மையில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட மனக் கசப்பு காரணமாகஅந்தப் பெண் மன வருத்தத்தில் இருந்துள்ளார்.

காதலனை இழக்க விரும்பாத அவர், டேவிட்டிற்கு 1,000 முறை தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். ஆனால் டேவிட் அந்த அழைப்பைத் தவிர்த்துள்ளார்.

மேலும் டேவிட்டை கண்காணித்து வந்த அவர், டேவிட்டின் வீட்டிற்குள்ளும் அத்துமீறி நுழைந்துள்ளார்.

சோபியின் இந்த செயற்பாடுகளால் தனக்குப் பாதுகாப்பின்றி உணர்வதாகவும் தனக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் டேவிட் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் சோபிக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனை விதித்து பிரித்தானிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பக்கங்கள் 05

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 15/09/2024

## 4 மாத பெண் சிசுவை கொன்ற குற்றச்சாட்டு

ஒட்டாவாவைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் 2023ஆம் ஆண்டு நான்கு மாத பெண் குழந்தையைக் கொன்ற வழக்கில் கொலைக் குற்றச்சாட்டை எதிர்கொள்கிறார். கடந்த ஆண்டு 02







# ஏர் கனடா விமான சேவை எந்த நேரமும் முடங்கலாம்

## விமானிகளுடனான சமரசப் பேச்சில் முன்னேற்றம் இல்லை

**கனடாவில் பெருந்தொகையான பயணிகள் மற்றும் சரக்குகளுடன் தொடர்புடைய பல நூற்றுக் கணக்கான விமான சேவைகளை முற்றாக முடக்கி விடக் கூடிய வேலைநிறுத்தம் ஏர் கனடா நிறுவனத்தில் நெருங்கி வரும் இறுதித் தருவாயில் - அதற்கான காலக்கெடு விற்கு சில மணிநேரங்களுக்கு முன்னரும் - ஏர் கனடா நிறுவனத்துக்கும் அதன் விமானிகள் தரப்புக்கும் இடையில் முட்டுக்கட்டை நிலைமை நீடித்து இருப்பதாகத் தெரிகிறது.**

ஏர்லைன்ஸ் மற்றும் விமானிகள் சங்கம், ஏர் லைன் பைலட்ஸ் அசோசியேஷன் (ALPA) ஆகியன இவ்விடயம் தொடர்பாக 15 மாதங்களாகப் பேச்சு நடத்தி வருகின்றன. ஆனால் நூறுக்கும் மேற்பட்ட சந்திப்புகளுக்குப் பிறகும் தரப்புகள் ஒரு உடன்பாட்டை எட்டவில்லை என்று ஏர் கனடா தெரிவித்துள்ளது.

ஏர் கனடாவில் சுமார் 5,200 விமானிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏர் லைன் பைலட்ஸ் அசோசியேஷன், ‘நியாயமான இழப்பீடு’க்கு கோரிக்கை விடுக்கிறது.

அதே நேரத்தில் ஏர் கனடா தான் ‘முன்னோடியில்லாத ஊதிய உயர்வுகளை’ வழங்கியுள்ளது என்றும், ஆயினும் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை ‘ மிக அதிகமானது’ என்றும் கூறுகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுக்குப் பிறகு 72 மணிநேர வேலை நிறுத்தம் அல்லது லாக்-அவுட் அறிவிப்பு வெளிவரலாம். இது ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தினசரி பயணிகளைப் பாதிக்கும். சரக்கு ஏற்றுமதியை தாமதப்படுத்தும் என்று விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

“தற்போதைக்கு, நடந்துகொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகளில் மேலும் முன்னேற்றங்கள் எதுவும் இல்லை” என்று ஏர் கனடா நேற்று சனிக்கிழமை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

“அழிந்துபோகக்கூடியவை போன்ற சில வகையான சரக்கு ஏற்றுமதிகளை கட்டுப்படுத்துதல் மற்றும் சில விமானங்கள் பறக்கும் அட்டவணையை சரிசெய்தல் உட்பட சில நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கத் தொடங்கியுள்ளோம். ஆயினும் இதுவரை எந்த விமானங்களும் ரத்து செய்யப்படவில்லை.” என விமான நிறுவனம் கூறியது.

“நாங்கள் எங்கள் திட்டங்களை இறுதி செய்கிறோம். எங்களால் முடிந்தவரை முதல் ரத்துகளை தாமதப் படுத்துகிறோம்” என்று ஏர் கனடா தெரிவித்துள்ளது.






# ஏர் கனடா விவகாரத்தில் அரசாங்கம் தலையிடாது

## பிரதம ட்ரூடோ திட்டவட்டம்



ஏர் கனடா விவகாரத்தில் அரசாங்கம் தலையிடாது என கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியுள்ளார்.

வேலைநிறுத்தம் அல்லது கதவடைப்பைத் தவிர்ப்பதற்கான ஒப்பந்தத்தை எட்ட வேண்டிய பொறுப்பு ஏர் கனடா நிறுவனம் மற்றும் விமானிகள் சங்கத்தின் மீது உள்ளது, மத்திய அரசாங்கத்தின் மீது அல்ல அல்ல என்றும் அவர் கூறினார்.

ஏர் கனடா விமானிகள் சங்கத்தின் வேலை நிறுத்த எச்சரிக்கைகளுக்கு மத்தியில், வெள்ளிக்கிழமை மாண்ட்ரீலில் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போது ட்ரூடோ இதனைக் கூறியுள்ளார். இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

வேலை நிறுத்தத்தால், விமானப் பயணத்தை நம்பியிருக்கும் மில்லியன் கணக்கான கனேடியர்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான வணிகங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை எப்படிக் கண்டறிவது என்பதை ஏர் கனடா மற்றும் விமானிகள் சங்கம்தான் செய்ய வேண்டும்.

ஏர் கனடா மற்றும் அவர்களின் விமானிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் பேச்சுவார்த்தையில் ஓர் ஒப்பந்தத்தை எட்டுவதற்கு கூட்டாட்சி அரசாங்கம் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருவதாகவும் ட்ரூடோ கூறினார்.

இந்நிலையில் ஏர் லைன் பைலட்ஸ் அசோசியேஷன் (ALPA), தொழிலாளர் பிரச்சினையில் உள்ள ஏர் கனடா விமானிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம், இறுதி நேரம் வரை ஏர் கனடாவுடன் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க முயற்சிப்பதாகக் கூறுகிறது.

அதேவேளை இன்று ஞாயிற்றுக்கிழமைக்குள் தீர்வு எட்டப்படாவிட்டால், 5,200 ஏர் கனடா விமானிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏர் லைன் பைலட்ஸ் அசோசியேஷன் 72 மணிநேர கதவடைப்பு அல்லது வேலைநிறுத்த அறிவிப்பை வெளியிடலாம் என்று கூறப்படுகிறது.

## 4 மாத பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மே 6 ஆம் தொகதி சிறுமி இறந்ததில் இருந்து இந்த வழக்கைத் தாங்கள் விசாரித்து வருகின்றனர் என ஒட்டா வாப் பொலிஸார் தெரிவித்தனர்.


அன்று, ஜெனெஸ்ட் தெருவில் உள்ள வீட்டிற்குத் தாங்கள் அழைக்கப்பட்டனர் என அவர்கள் கூறுகிறார்கள்.

அந்த நபர் இப்போது இரண்டாம் நிலை கொலை மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை வழங்கத் தவறிய குற்றச்சாட்டை எதிர்கொள் கிறார்.

சந்தேகநபருக்கும் கைக்குழந்தைக் கும் இடையிலான உறவு குறித்த விவரங்களை பொலிசார் பகிர்ந்து கொள்ளவில்லை.

குற்றம் சாட்டப்பட்டவர் நேற்று நீதி மன்றத் தில் ஆஜர்படுத்தப்பட்டார்.





# மிஸிஸாகாவில் காருக்குள் பெண் சுடப்பட்டு படுகாயம்

## மற்றொரு வாகனம் தேடப்படுகின்றது

சமீபத்தில் மிஸிஸாகாவில் காருக்குள் பெண் ஒருவர் சுடப்பட்டமையை அடுத்து, பீல் பிராந்தியத்தில் உள்ள பொலிஸார், சந்தேகத்துக்குரிய மற்றொரு வாகனத்தைக் கண்டுபிடிக்க பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

இச்சம்பவம் குயின் எலிசபெத் வே (QEW) க்கு வடக்கே, மிசிசாகா சாலை மற்றும் வடக்கு ஷெரிடன் வழிக்கு அருகில் செப்டம்பர் 10 அன்று இடம்பெற்றது.

அன்றைய தினம் அதிகாலை 4 மணியளவில் நிலைமை குறித்து தங்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாக பீல் பிராந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட 33 வயதுடையவர் மற்றும் வாகனத்தை ஓட்டியதாக நம்பப்படும் அவர் தொடர்ந்து மருத்துவமனையில் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

அவரது காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எரின் மில்ஸ் பார்க்வேக்கு கிழக்கே மிசிசாகா சாலை மற்றும் ஹைரிவர் கோர்ட்டுக்கு அருகில் இது நடந்ததாக பொலிஸார் நம்புகின்றனர்.

# இலங்கையில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு கனேடியத் தமிழர் தேசிய அவை முழு ஆதரவு

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளரால் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையை கனேடியத் தமிழர் தேசிய அவை வரவேற்று அதற்கான முழுமையான ஆதரவையும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கனேடியத் தமிழர் தேசிய அவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சிவில் சமூகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய அமைப்புகள், மாணவர் அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்பன இணைந்து 'தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு' என்ற ஆற்றலுள்ள அணியாக ஒன்றிணைந்துள்ளன. இந்த ஒன்றிணைவின் ஊடாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் அறிவிப்பும், வேட்பாளர் அறிக்கையையும் வெளிவந்துள்ளன.

இந்த ஒற்றுமையானது, தமிழ் மக்களின் கூட்டு அடையாளத்தை வலுப்படுத்துவதற்கு ஒரு புதிய நம்பிக்கையையும் வலுவான அடித்தளத்தையும் தருகிறது.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்கள் எவரும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டாது, தமிழ் மக்களை அடிபணியச் செய்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு அதிகாரத்திற்காகப் போட்டி போட்டு வருகின்றனர்.

ஆங்கிலேயர்கள் இலங்கைத் தீவை விட்டு வெளியேறியதிலிருந்து கடந்த 76 ஆண்டுகளாக இந்நிலைமை தொடர்கிறது. ஏனைய வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது என்பது தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதையும், தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் தமிழின அழிப்பையும் ஏற்றுக் கொள்வதற்கு ஒப்பானதாகும்.




எனவே, தமிழ் மக்கள் இத்தேர்தலைப் பயன்படுத்தி, தமது நிலைப்பாடு குறித்து அனைவருக்கும் ஒரு தெளிவான செய்தியை அறிவிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியப் பொது வேட்பாளர் பின்வரும் முக்கிய விடயங்கள் உள்ளடக்கிய தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய ஒரு தேசம்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த இலங்கை அரசுகளின் இன வழிப்புகளால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரசுகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்புக்கான சர்வதேச விசாரணை மற்றும் தண்டனை வழங்கும் பொறிமுறை, தமிழின அழிப்புக்கான பரிகார நீதி என்பவற்றைத் தமிழ் மக்கள் கோருகின்றனர்.

தமிழர் தாயகப் பகுதிகளில் வாழும் தமிழர், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் அறிக்கைக்கு வாக்களிக்கிறீர்கள்.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு கொடுப்பதன் ஊடாக ஒரு தெளிவான செய்தியை கொடுக்கின்றீர்கள். தமிழ் மக்களாக ஒன்றிணைந்து எமது மக்களின் நியாயமான வேணவாக்களை நிறைவேற்றுவதற்கான கூட்டுச் செயற்பாட்டைத் தொடங்குவோம். – என்று உள்ளது.



# ரொறன்ரோவின் புதிய பூங்கா நேற்று திறந்து வைக்கப்பட்டது

ரொறன்ரோவின் புதிய பூங்கா அதிகார பூர்வமாக நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேயர் ஒலிவியா சோவும் மற்ற நகர அதிகாரிகளும் லெஸ்லி லுக்அவுட் பூங்காவின் திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர். இது டொமி தொம்சன் பூங்காவின் நுழைவாயிலுக்கு அருகில் மார்ட்டின் குட்மேன் பாதையில் அமைந்துள்ளது.

ரொறன்ரோ நகரம், பூங்காவில் ஒரு செயற்கை பொது கடற்கரை மற்றும் 12 லெஸ்லி செயின்ட்டில் 1.9 ஏக்கர் திறந்த வெளி உள்ளது. கப்பல் கால்வாயின்முழு நீளத்தின் காட்சிகளுடன் பொதுமக்களை தண்ணீரின் விளிம்பில் இணைக்கிறது.



# ரொறன்ரோ சூட்டுச் சம்பவம் பொலிஸ் விசாரணையில்!

நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் ஒரு நபர் மருத்துவமனைக்குச் சென்றமையை அடுத்து ரொறன்ரோ பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நோத் யார்க்கின் கொரோனேஷன் பூங்காவில், பிளாக் க்ரீக் மற்றும் ட்ரெத்வி டிரைவ்களுக்கு அருகில் அதிகாலை 1:15 மணியளவில் இந்த சம்பவம் நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். பாதிக்கப்பட்டவர் 30 வயதுடையவர். உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் 30 அவர் உள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




சந்தேகத்திற்குரிய தகவல்கள் எதுவும் தற்போது வரைக் கிடைக்கவில்லை.



# தீவிரமான புற்று நோயாளி மரதன் ஓடுவதற்குத் தகுதி

கனடாவில் தீவிர புற்று நோயினால் பாதிக்கப்பட்டவர் மரதன் ஓட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுக்கொண்டுள்ளார்.

ஒன்றாறியோ மாகாணம் வாட்டர்லுவைச் சேர்ந்த நபர் ஒருவர் தீவிர புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

66 வயதான டானா ஃபாக்ஸ் என்பவரே இவ்வாறு மரதன் ஓட்ட போட்டிக்கு தகுதி பெற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமக்குப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டதாகவும் டிசம்பர் மாதம் முதல் சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர்ச்தெரிவித்துள்ளார்.

தீவிர புற்று நோய் காரணமாக அவர் நீண்ட காலம் உயிர் வாழக்கூடிய சாத்தியங்கள் கிடையாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தை கடக்க முடியாது என மருத்துவர்கள் கூறினர் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், மனம் தளராது தொடர்ச்சியாக அவர் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்த ஆண்டு ஆரம்பக் கோடைகாலத்தில் புற்றுநோயை இல்லாது ஒழிப்பது குறித்த விழிப்புணர்வு சைக்கிள ஓட்டத்தில் பங்கேற்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புற்றுநோய் சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளும் அதேவேளை இவர் இவ்வாறு செயல்பாடுகளிலும் பங்கேற்று வருகின்றார்.







# கல்கேரி பகுதியச் சேர்ந்தவர் கரடித் தாக்குதலில் படுகாயம்

கல்கேரி பகுதியைச் சேர்ந்த ஒருவர் வெள்ளிக்கிழமை காலை கிரவுனெஸ்ட் பாஸில் நடைபயணம் மேற்கொண்டபோது கரடி ஒன்று அவரைத் தாக்கியதால் படுகாயமடைந்து மருத்துவமனையில் இருக்கிறார் என அல்பர்ட்டா றோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸ்(RCMP) தெரிவித்தது.

அல்பர்ட்டா - பிரிட்டிஷ் கொலம்பியா எல்லையில் அல்டாவின் கோல்மனுக்கு வடமேற்கே சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள விண்டோ மவுண்டன் ஏரிக்கு அருகில் உள்ள தொலைதூரப் பகுதியில் தனியாக நடைபயணம் மேற்கொண்ட 45 வயதுடைய நபரே இவ்வாறு கரடித் தாக்குதலுக்கு இலக்கானார் என றோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸின் பொதுத் தகவல் அதிகாரியான கான்ஸ்டபிள் கோரி ரிக்ஸ் தெரிவித்தார்.

உதவி கோரி சமிக்ஞை செய்ய அவர் கார்மின் SOS சாதனத்தைப் பயன்படுத்தினார் என ரிக்ஸ் கூறினார்.

சனிக்கிழமை வெளியிடப்பட்ட பொலிஸ் செய்தி வெளியீடு, அந்த நபரின் காயங்களை ‘விரிவானது’ என்று விவரித்தது.

பல ஏஜென்சிகள் மீட்புக்கு உதவின என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.